This question paper contains 4 printed pages]

*Your Roll No.* ..................................

**8676**

## B.A. (PROGRAMME)/I AS

## TAMIL LANGUAGE (B)—Paper I

*Time* : 3 *Hours* *Maximum Marks* : 100

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

*Note* :– The maximum marks printed on the question paper are applicable for the students of the SOL/NCWEB/ Non-Formal cell. These marks will, however, be scaled down proportionately in respect of the students of Regular Colleges at the time of posting of awards for compilation of result.

I. ஏதேனும் ஒரு பொருளில் 150 சொற்களுக்கு மிகாமல் சிறு கட்டுரை எழுதுக. 20

(i) கம்ப்யூட்டரின் நன்மை தீமைகள்

(ii) பெண் சிசுக் கொலை

(iii) புத்தகக் கண்காட்சி

P.T.O.

II. கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனடிப்படையில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்குச் சுருக்கமான விடை தருக. 20

வீழ்ச்சியுற்ற பாரதத் திருநாட்டில் விடுதலை வேட்கையை ஊட்டி, உரிமைப் போருக்கு எழுச்சி பெறுமாறு செய்வதே பாரதியின் நோக்கமாகும். ஆங்கிலேயரால் அடிமையாக்கப்பட்ட நம் தாய்த்திரு நாட்டை, பாரதமாதாவாக த் தேசியத் தலைவர்கள் உருவகப்படுத்தி மக்களிடையே அறிமுகப்படுத்திவந்த காலகட்டத்தில் (1912) பாரதியார் இந்தப் பாவியத் தைப் படைத்துள்ளார். துரியோதனாதியர்களால் அடிமைப் படுத்தப்பட்ட பாஞ்சாலியை பாரதமாதா வாகவே, பாரதியார் உருவகித்துள்ளார். அடிமைப்பட்ட பாரதம, தேசிய எழுச்சியின் பயனால் விடுதலை அடைய வீரவஞ்சினம் கூறுவதையே, பஞ்சாலி சபதம் என்னும் முடிமணியாக அமைத்து அவர் காட்டுகிறார். பாரத தேசத்தின் அடிமைத்

தளையை அறுத்து, விடுதலை பெற்ற உரிமை வாழ்வை அடையுமாறு செய்ய வேண்டும் எனும் உட்பொருளைக் கதையின் மூலம் தெரிவிப்பதே பாஞ்சாலி சபதம் என்பது யாவரும் அறிந்த உண்மை. பழைய காப்பியக் கதைகளில், புராணங்களில் இடம்பெற்றுள்ள சுவையான நிகழ்ச்சியை, கதைக்கருவின் சிறந்த ஒரு பகுதியினை மையமாகக் கொண்டு புதியதொரு கதைப்பாடலைக் காப்பிய அமைப்பில் இயற்றினார். இதனைக் கண்ட காவியம் என்பர்.

(i) பாரதியின் நோக்கம் என்ன?

(ii) பாஞ்சாலி சபதம் உணர்த்தும் உண்மை என்ன?

(iii) கண்ட காவியம் என்றால் என்ன?

(iv) மேற்கண்ட பத்திக்குப் பொருத்தமான தலைப்பைத் தந்து அப்பத்தி கூறும் முக்கிச் செய்திகளை சுருக்கமாக எழுதுக.

III. பிழை திருத்தி எழுதுக : 15

(i) ஆசிரியர் பலர் வந்தார்கள்

(ii) பசுக்குப்பி

(iii) நரி குரைக்கும்

(iv) மளை வெல்லம்

(v) புத்தகத்தை நாளை தந்தேன்

IV. ஒரு பொருள் குறித்த பலசொற்கள் மொழி நடைச் சிறப்புக்கு உழலுவதை விளக்கிச் சான்று தந்து விளக்குக. 10

**(அல்லது)**

பலபொருள் குறித்த ஒரு சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

V. ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 35

1. 'மாயக்கிளிகள்' என்னும் சிறுகதையை மதிப்பிடுக.
2. 'வேட்டை' என்னும் சிறுகதையின் மையக் கருத்தை விளக்கி வரைக.
3. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றை விளக்குக.
4. 'பள்ளத்தெரு' சிறுகதை உணர்த்தும் சாதிய கொடுமைகளைப் புலப்படுத்துக.